


# இஸ்லாம் மித்திரன்.

# Islam Mittiran.

"லா இலாஹ இல்லல்லாஃ
முஹம்மதுறஸூலுல்லாஃ"

புத். 1. { அறப் ஹூ 1312 முஹர்ரம்மீ 1 உ பு. ஜ. / இங்கிலீஷ் ஹூ 1894 ஜூலை மீ 4 உ பு. ஜ. } இல. 10.


## முஹர்ரம் மாசமும் விபரீத விஷயமும்.

எங்கள் இஸ்லாம் மார்க்க அனுசாரிகளின் புதுவருஷம் "முஹர்ரம்" என்னும் இம்மாசத்தில் ஆரம்பிக்கின்றது. ஒரு வருஷத்திற்கு 12 மாசம். 12 மாசங்களிலும் அதி உத்தமமாகிய சங்கைக்குரிய மாசம் இந்த மாசமே. விதியாக்கப்பட்ட நோன்பினாலேதான் றமளான் மாசம் மற்றமாசங்களிலும் உன்னதப்பட்டது. இந்த மாசத்தில் மூஸா நபி அலைஹிஸ்ஸலாம் அவர்களின் தவறுத்து மார்க்க அனுசாரிகளும் நோன்புவைத்திருக்கின்றார்கள். இந்தச் சங்கையான மாசத்தில் சர்வ வல்லவனாகிய அல்லாஃவும், அவனது தூதரும் ஏவிய ஏவற் பிரகாரம் நல் வணக்கங்களைச் செய்து மோட்ச லாப மடையவேண்டியது இந்த மாசத்தில் எங்கள் இரட்சக நாயகர் நபிகள் பெருமானார் அவர்களின் ஹிருதயக் கனி போன்ற குமாரத்தியாராகிய மாதர்கள் நாயகியார் பாத்திமா றளியல்லாஹூ அன்ஹா அவர்கள் பயின்றெடுத்த இரு கண் மணி ஒளி ஆகிய ஹஸன் றளியல்லாஹூ அன்ஹூ, ஹூஸைன்

றளியல்லாஹுஅன்ஹு அவர்களும், நபிகள் கோத்திரர்மித்திரர்முதலிய உத்தமர்களும் மரணதூதரால்பிரிக்கப்பட்டு சுவன வாழ்வைப் பெற்றார்கள். இந்த மாசத்தில் நபிகள் பெருமானார் அவர்களின் குடும்பத்தார் அனேகர் வருத்தங்களையும் இம்சைகளையும் எஸிது முதலிய துஷ்டர்களால் அனுபவித்ததாக ஆகம சரிதங்கள் கூறுகின்றன. ஆனால் இச்சரிதங்களின் அந்தரங்கங்கள் மெத்த குருடமாயுள்ளன. இது சங்கதியைப்பற்றி சில இமாம்கள் எஸிதைக்காபிர் என்று சொல்லலாம் என்றும், சொல்லக்கூடாதென்றும், இன்னும் சிலர் அவனுக்குச் சாபமிடலாம் என்றும், அது விஷயங்கள் தேவ சங்கற்பத்தால் நடந்தவை ஆதலால் அதுகளைப்பற்றி எஸிதை காபிர் என்று தீர்ப்புச் செய்கிறதில் நாங்கள் பிரவேசிக்க மாட்டோம் என்றும், அவனைக் காபிர் என்றும் முஸ்லிம் என்றும் சொல்லாமல் மௌனஞ் சாதிப்பது உசிதமென்றும், இதுதான் சரியான பாதையென்றும் சில இமாம்கள் கூறியிருக்கின்றார்கள்.

(ஹதீது)

என்னுடைய மார்க்க அனுசாரிகளுடைய விஷயங்கள் சீர்திருத்தமாயும் ஒழுங்காயும் நீங்காது நடந்துவரும், அதைச் சீர்கெடவும் ஒழுங்கறவும் விகற்பஞ் செய்கிறவர்களில் முதல் மனுஷன் பனீ உமையாக்கிளையிலுள்ள ஒருவனே, அவனை எஸிது என்று கூறப்படும் என்று நபிகள் பெருமானார் திருவாய் மலர்ந்து தீர்க்கதரிசனங் கூறியிருக்கிறார்கள்.

(உணர்ச்சை)

எஸிதை "லஉனத்து"ச் செய்வதை (சாபமிடுவதை)ப்பற்றி இமாம்களாகிய மதாந்தநிபுணர்களுக்கிடையில் பற்பல வித்தியாசக்கருத்துகளுண்டாயிருக்கிறன. இமாம் அஹ்மது இப்னுஹம்பல், இப்னுல் ஜவ்ஸி போன்ற சிலர்கள் "லஉனத்து" செய்யலாம் என்று சொல்லுகிறார்கள். இன்னும் வேறு சிலர் அப்படி சபிக்கிறது சரியல்லவென்றுஞ் சொல்லியிருக்கின்றார்கள். இமாம்கஸ்ஸாலி றஹ்மஹுல்லாஹ் அவர்கள் அவனைச்சபிக்கிறது கூடாது என்று அத்தாட்சிப் பத்திரமுங்கொடுத்து, அந்தச் சொல்லுக்குத் துணையாக மெத்த தீர்க்கமாய்ப் பேசியுமிருக்கின்றார்கள்.

எஸிதை சபிக்கிறது கூடாது அல்லது வேண்டுமான காரியமல்ல என்பதுதான் எங்களது இமாம்களுடைய சட்டத்திற்கும், ஒரு மனிதன் (குபிர்) இஸ்லாமை விட்டு நீங்கி மரணமடைந்தான் என்பதை அறிந்தாலன்றி, மற்றப்படி அவனை சபிக்கப்படாதென்று இமாம்கள் ஒற்றுமையாய்ச்சொன்ன சொல்லுக்கும் சரியாக ஒத்திருக்கிறதென்று இப்னு ஹஜர் இமாம் றஹ்மஹுல்லாஹ் சொல்லியிருக்கிறார்கள். இதன் அந்தரங்கம் அல்லாஹ்வும் றஸூலும் அறிந்த காரியம் ஆதலால் அதுகளை நீளமாக்காது இம்மட்டில் சுருக்கி, இம்மாத்தையில் அ

றிவில்லாத சில சாமானியர்களால் நடத்தப்படும் நூதனக்கிரியாங்கத்தைப் பற்றிப் பேசி, மத நிபுணர் வாக்கின் நிரூபணத்தால் தீர்மானிப்போம்.

( விபரீத விஷயம் )

இந்த முஹர்ரம் மாசத்தின் காரியா காரியங்களில் இஸ்லாம் மார்க்க அநுசாரிகளில் இந்தியா இலங்கை முதலிய தேசங்களிலுள்ளோரில் சாமானிய சனங்களாயுள்ள அனேகர் நவீனக் கொள்கையாளர்களாய்ச் சில விபரீத வகுப்பினராய்ப் பிரிந்திருக்கின்றார்கள். இவர்களில் ஒரு வகுப்பார் கிறிஸ்தவர்களின் செய்கைகளுக்கு ஒப்பாகச் சிற்சில கிரியைகளை நடத்துகின்றார்கள். ஹுஸைனின் றளியல்லாஹு அன்ஹு அவர்களின் மரண ஞாபகங் கருதி முஹர்ரம் மாதம் பிறை பிறந்தது முதலாக கறுப்பு உடுப்புகளை யுடுத்துக்கொண்டு, பள்ளிவாசலுக்குப்போய் நெஞ்சில் அறைந்தறைந்து தேங்காய் முதலிய காய்களால் அடித்துக்கொள்கிறதும், "யா ஹுஸெயின் யா ஹுஸெயின்" என்று சொல்லி அழுகிறதும், இதுபோலவே பெண்களும் தங்கள் தலைகளை இறந்துகொண்டு, மாரில் அறைந்தழுது சஞ்சலிக்கிறதும் இறந்த வீட்டில் துயரப்படுமாறு துக்கங்கொண்டாடுகிறதும், இவ்வாறு பத்து நாட்களையுங் கழிக்கின்றார்கள். இவர்களை ஷியா வகுப்பினர் என்கப்படுகின்றது. இவர்களின் கிரியைகளை, பொம்பாய், கல்கத்தா முதலிய வட இந்தியாப் பகுதிகளில் அதிகமாய்க் காணலாம்.

வேறு சிலர் இந்த முஹர்ரம் மாசம் பிறந்தவுடன், கொடிமரங்களை நிறுத்திக் கொடி கட்டுகிறதும், கூடு எடுக்கிறதும், பல வேஷங்களையும் போட்டுக்கொண்டு கூத்தாடிக் காசுபறிக்கிறதும், கிடங்குவெட்டி நெருப்பு எரிக்கிறதும், ஓலைக்குச்சில்கள் அடைத்து அதுகளில் ஒரு கைபோன்றதை ஐந்து விரல்களைப் போன்று பித்தளை முதலிய லோக வர்க்கங்களால் செய்து வைத்து செத்த மயிலிறகால் இருபக்கமுஞ் சூட்டிக்கட்டி, சாம்பிராணி முதலிய பல புகைகளாகிய வாசனை ..ட்டு, தீபங்களேற்றி, பய பக்தியாக வைத்து இபுலீஸின் தோழர்களாகிய பக்கீர் என்னும் யாசகர்களும் காசர்க் மான்கொண்ட கள்ள லெப்பைகளும் பெண்களையும் ஏழை மதியினர்களையும் ஏமாற்றி காணிக்கை போடச்சொல்லி காசு பறிக்கிறதும், இதைப் பஞ்சாவென்று பணிகிறதும், பாடையில் வைத்துச் சுமக்கிறதும், ஆகிய பற்பல கோலங்களெல்லாம், இந்தியாவிலும், இலங்கையிலுமுள்ள சில சிற்றூர்களிற் செய்து வருகின்றார்கள். இப்படிச் செய்கிறவர்கள் பெயரளவிலும் உடையிலும் இஸ்லாம் என்கிறவோர் இலட்சணமிருக்கிறதன்றி மற்றப்படி அஹ்லுஸ்ஸுன்னத்துக்களாகிய முஸ்லிம்களல்லர். இவர்களும் ஏகூதிகளைப்போன்ற ஓர் பிரிவினரே. ஏகூதிகள் கோலம்போட்டுக் கொண்டாடுவதிலும் நூதனங்களைத் தொடர்வதிலும் மிகப் பெருமைப் படைத்தவர்கள். இந்த நூதனங்களையும் கோலமாறிக் கூத்தாடித் திரிவதையும்,

பஞ்ஜா வைக்கிற சங்கதிகளையும் இவைபோன்ற இஸ்லாம் மார்க்க விரோதமான விஷயங்களைப்பற்றியும் இதற்குமுன்னார் முஸ்லிம் நேசன் பத்திரிகையில் தெளிவாய் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றமையாலும், எமது மித்திரர்களில் அனேகர் இது விஷயங்கள் மார்க்க விரோதமென்பதை அறிந்திருக்கின்றமையாலும், இது சங்கதியை எமது இச்சிறு பத்திரிகையில் அதிகம் விரிக்காது சுருக்கினோம்.

(கவனிப்பு)

இந்தக் கூத்துகள், கோலங்கள், தமாசாக்கள், பஞ்ஜாவுக்குப் பணிதல், சேர்ந்துகொள்ளுதல், முதலியவைகள், கிரியையாலும், எண்ணத்தாலும், உதவியாலும், பெரும் பாவங்களாம். அதாவது இந்தக் கிரியைகள் (குபிர்ர்க்கு) விக்கிர காராதனை செய்யும் அஞ்ஞானிகளின் பாவமாம். இந்தப் பாவச் செய்கையைச் செய்தவர்கள் பாவமன்னிப்புப் பெறாத பட்சத்தில் இறந்தால் நரகபாதனைக்குளாவர்.

(உபதேசம்.)

ஆகையால் இஸ்லாம் மித்திரர்களே! நீங்கள் தெளிவாகிய உங்கள் புத்தியைக்கொண்டு சற்று ஆலோசித்துப்பாருங்கள். குர்ஆன், ஹதீதுகளின் ஆதாரத்தால் மதாந்த நிபுணர்களியற்றிசட்ட நிரூபணசபையாரா லேற்கப்பட்ட கித்தாபுகளின் அத்தாட்சிகளை வாசித்து, அல்லது ஆலிம்களிடங் கேட்டு அறிந்து, இந்தக்கெட்ட தூர் நடத்தைகளை விட்டும் நீங்கிவிடுங்கள். இந்தக் கெட்ட தூதனக்ரியைகளை விட்டொழியுங்கள். சங்கையாகிய இந்த மாசத்தில் நோன்பு பிடிக்கிறதையும், தான தருமங்கள் செய்கிறதையும்முஸ்லிம்களுக்குஏவப்பட்டிருக்கிறது. கோலம்போடுகிறவர்களுக்கும், கூத்தாடுகிறவர்களுக்கும், வேஷக்காரர்களுக்கும் ஒரு காசாவது கொடுத்துப் பாவத்தை விலைக்கு வாங்காதீர்கள் என்று விலக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால் இவைகளை உய்த்துணர்ந்து மார்க்க முறை தவறாது சன்மார்க்க வழியில் நடக்கும்படி இத்தால் உபதேசிக்கின்றோம்.

## ஆசூறா.

இந்த முஹர்ரம் மாசத்தின் பத்த்தாம் நாளை ஆசூறா என்று சொல்லப்படும் அந்த நாளினுடையபலனைப் பற்றி விவரிக்கிறதற்கு இப்பத்திரிகையிடம்பெறாது. ஆசூறா நாளாகிறது, இரணப்பொலிவை அதிகப்படுத்தப்படும் தினம். பிழை பொறுக்கப்படும் தினம், தேவ கருணை பொழிந்த தினம். ஆதலால் ஆசூறா நாளில் தன் வீட்டில் சீவனத்தை விஸ்தீனப்படுத்தித் தம் மின பந்து மித்திரர்களோடு புசித்து தருமமுமீய்ந்தால், அவ்வருஷம் முற்றும் அப்படிச்செய்தவர்கள் சீவன அபி விருத்தியை யடைந்து சுகதேகியாய் வாழ்வார்களென்பது பிரத்தியட்ச காட்சியாய்ச் சோதித்தறியப்பட்ட விஷயமாயிருக்கின்றது.

எகூதிகள், இந்த ஆசூறா தினத்தில் மஞ்சள், செவ்வப்பு முதலிய நிறங்களை

களைத்து சாதங்கள் செய்வார்கள், அந்த ஏகூதிகளின் வழக்கம்போல முஸ்லிம்கள் நடக்கவேண்டாமென்று "இர்சாது' முதலிய கித்தாபுகளில் கூறப்படுகின்றன.

ஆதலால், இஸ்லாம் மித்திரர்களே! அந்தச் சங்கையாகிய ஆஷுறாவுடைய நாளைச் சிறப்பியுங்கள், இயன்றளவில் தருமத்தைச் செய்து நன்மையைப் பெறுங்கள், பந்து மித்திரர்களோடு உண்டு சுகித்து, உங்கள் வாழுவை நீடிக்கச்செய்யும்படி இரந்து கேட்டு அல்லாஹ்வைத் துதித்து சந்தோஷமடையுங்கள். ஆஷுறா தினத்தின் பொருட்டால் அல்லாஹுத்தஆலா உங்களுக்கும் எங்களுக்கும் கிருபைசெய்து இரட்சித்துக் காப்பாராக.

## இமாம் அபுல்ஹஸன் சாதுலி றஹ்மதுல்லாஹி அவர்கள் சரித்திரம்.

[சென்ற 7 இலக்கப் பத்திரிகைத் தொடர்ச்சி]

மகத்தான அல்லாஹுத்தஆலாவின் மகத்துவ கடாட்சம்பெற்ற நாயகம் அபுல்ஹஸன் சாதுலீ றஹ்மதுல்லாஹி அவர்கள் கூறுகின்றதாவது:- என்னுடைய குரு நாயகம் அப்துஸ்ஸலாம் இப்னு மஷீஷ் றளியல்லாஹு அன்ஹு அவர்களின் சன்னிதானத்தில் ஒரு தினத்தில் நான் உட்கார்ந்திருக்கும்போது, அவர்களுடைய மடியின் மீது ஒரு சிறு குழந்தையிருந்தது. அப்போது என் மனதில் "இஸ்முல் அஉளம்" என்பது யாதென்று குரு நாயகமிடம் வினவ உதிப்பானது. அவ்வேளையில் அவர்களிடமிருந்த குழந்தை உடனே எழுந்து என்னிடம் வந்து அதனுடைய கையை என் புஜத்தில் அடித்து, அபுல்ஹஸனே! இந்த செய்கு அவர்களிடம் "இஸ்முல் அஉளம்" யாதென்று வினவ நாடுகிறீரா? அது உம்மிலிருக்கின்றது. நீர்தான் அந்த "இஸ்முல் அஉள"மாயிருக்கிறீர் என்று பகர்ந்தது. இதைக்கேட்ட குத்பு நாயகம் யாதொன்றும் பேசாது மௌனமாயிருந்தார்கள். அந்தக்குழந்தை பகர்ந்த மகத்துவ நாமம் நீ தான் என்றதின் தாற்பரியமாவது அவர்களுடைய இருதயத்தில் அல்லாஹுத்தஆலா அவனுடைய அந்தரங்க விசேஷ பொக்கிஷத்தை சேமம்வைத்திருக்கிறான் என்பதாம் என்று மபாகிர் என்னும் கித்தாபிற் கூறப்படுகிறது.

சாதுலி நாயகம் அவர்கள் மனசால் எண்ணியதை யறிந்து சிறு குழந்தை விடை யருளியதைக்குறித்து செய்கு அவர்கள் புன் முறுவல் கொண்டு, குத்பு நாயகத்தை செய்கு அவர்கள் விளித்து, அபுல்ஹஸனே! உனக்குப் பகரமாக இந்தக் குழந்தை விடை கூறிற்று என்றார்கள். ஆகையால் உமக்கு சகல பாக்கியமு முண்டாவதாக என்று ஆசீர்வதித்தார்கள்.

அந்தட்சணத்திலே, அந்தக் காலத்தின் "குத்பு" என்னும் மகத்துவ பட்டத்தை அல்லாஹுதஆலாவால் பெற்றுக்கொண்டார்கள். அப்படி அவர்கள் குத்பு ஆகிய பிறகு, செய்கு அவர்கள் சாதுலி இமாம் அவர்களை நோக்கி, அலியே! நீர் ஆபிரிக்காக் கண்டத்திற்குப் பிரயாணப்பட்டு, அப்பகுதியில் சாதல் என்னும் பட்டணத்திற்குப்போய்ச் சஞ்சரிப்பீராக. அங்கே அப்போதில் சர்வ தயாபரனாகிய அல்லாஹ், சாதுலீ என்று நாமஞ் சூட்டுவான். அந்த நாமத்தைப் பெற்ற பிறகு தூனிஸ் என்னும் பட்டணத்திற்குப்போவீர் அங்கே அந்த அரசாட்சியாரால் மிக்க கனதி மரியாதையோடழைக்கப் பெறுவீர், அதன் பிறகு நீர் குண திசையாகிய கிழக்குப்பகுதியிலுள்ள தேசங்களுக்கு யாத்திரை செய்வீர், அங்கே உன்னத பதவியின் அக்கிராம் பெறுவீர் என்று முன்னறிக்கையாய் சுபவாக் கருளினார்கள்.

இவைகளை யெல்லாங் கேட்கப்பெற்ற நாயகம் சாதுலீ இமாம் தங்கள் செய்கை நோக்கி, எனது நாயகமே எனக்கு நல்லுபதேசங் கூறுங்கள் என்றார்கள். என்கவே, அப்துஸ்ஸலாம் றஹ்மஹுல்லாஹ் அவர்கள், அபுல்ஹஸனே! நீர் எல்லாம் வல்ல அல்லாஹ்வைப்பயந்து கொள்ளும், மனுஷர்களையும் பயந்து கொள்ளும், மனுஷர்களின் விருத்தாந்தங்களைக் கூறுவதை விட்டும் உமது நாவை தூய்மைப்படுத்திக் கொள்ளும், (கருத்தாவது மனிதர்களுடைய வரலாறுகளை இபாளிக்காது நாயனை தியான வணக்கஞ் செய்யும் என்பது) உமது நேத்திர தோத்திரமா யிருக்கின்ற மனிதர்களையும் அவர்களின் வசமுள்ள இப்பிரபஞ்ச பாக்கியங்களாகிய சொத்துச் சுதந்திர முதலியவைகளை விட்டும் உம்முடைய ஹிருதயத்தைப் பரிசுத்தமாய்வைத்துக்கொள்ளும், உம்முடைய அவயவங்களைப் பாவக் கிரியையில் மாட்டிக் கொள்ளாது காப்பாற்றிக் கொள்ளும், விதியாக்கப்பட்ட வணக்கங்களை ரேக்தவறாது தருணத்திலே முடிப்பதைக் கடைப்பிடியாய்ப் பிடித்துக் கொள்ளும், மனிதர்களுக்குப் போதிக்க வேண்டிய மார்க்க அறிவு முதலியவற்றைப் போதியும். அப்போது உம்மளவில் அல்லாஹ் உடைய வலிமை நிறப்பமாகி விடும், உமது வறகெனும் பேறுதல் பூரணப்படும் என்று உபதேசித்துப் பயணம் அனுப்பி வைத்தார்கள்.

இன்னும் வரும்.

## தாய் வீட்டுப் பெண்.

முகவுரைப் பேரையுடைய பெண் தன் தாய் வீட்டில் பிறந்தது முதல் ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப் பட்டு மாமி வீட்டுக்கு செல்லும்வரையில் யதேச்சையாகத் திரிந்து விளையாடிக் காலங் கழிக்கின்றாளென்பது யாவரும் அறிந்த விஷயமே. அறிந்திருக்கினும் விசேஷமொன்று அவளாலும் இவளைப் பெற்றோராலும் நடந்துவருகின்றதென்பதை யறியாமலும் அறிந்

தும் இருக்கின்றார்கள் என்பதைக்கிஞ்சித்து நாம் காட்டப்புகுந்தோம். இங்ஙனம் காட்டுவது அப்பெற்றோர்களுக்கு இன்றியமையாததாகின்றது. பிறந்த பெண் என்றைக்காயினும் பிறன் மனைவியாக வேண்டுவதே யன்றிப் பிறிதில்லை. மழைக்காலத்துக்கு வேண்டியவைகளை வெயிற்காலத்தில் சேகரித்துக்கொள்வது மனிதர்களுடைய இயற்கை. அதுபோலப் பின் புகும் மனைக்கும் மணவாளனுக்கும் வேண்டுவதைப் பெண்ணாயினும், பெண்ணைப் பெற்றோராயினும் சம்பாதித்தும் சம்பாதிக்கச் செய்தும் வர வேண்டும். ஆனால் பேதைப் பெண்ணால் மேற்கண்டவைகளைச் சம்பாதிப்பது மிகுந்த கஷ்டம். பெற்றோரே சம்பாதிக்கச்செய்ய வழிவகைகளைக் கண்டு காட்ட வேண்டும். அவ்வழி வகைகள் கிடைத்தற்கு அருமையானவையும், கொடுத்தற்கு துர்லபமானவையுமல்ல அவையென்னவெனில், குடித்தனப் பாங்கும், மரியாதையுமே. இவைகள் அப் பெண்ணுக்குக் கற்பிக்கப்படாமலிருப்பதே மாமி வீட்டாரால் பின் பலவித துன்பங்கள் செய்வதற்குக் காரணமாயிருக்கின்றது. சில பெற்றோர்கள் தம் பெண்களுக்கு அவைகளைக் கற்பியாது செல்வமாக வளர்த்துப் பின் சீரழிய விடுகிறார்கள். தாய் வீட்டிலிருக்கும்போது யாரேனும் ஐயோ இப்பெண்ணுக்கு இக்கத்திரிக்காயை அரியத் தெரியவில்லையே, ஓர் படி அரிசி யரித்து உலையில் போடத் திறம் இல்லையே யென்று பெற்றோரைக்கேட்டால், இவைகளை யெல்லாம் இவள் தன் மாமி வீட்டுக்குப்போய்க் கற்றுக்கொள்வாள்; அவர்கள் தாம் கற்றுக்கொடுக்கத் தக்கவர்கள் என்று சாக்குப்போக்குச் சொல்லி ஓடையாக இருப்பார்கள். இப்படிச் சொன்னவர்களை நாம் கண்டிருக்கிறோம். இதற்குக் காரணமென்ன வென்று யோசிக்கும்போது அவர்கள் செல்வச் செருக்கும் தெரியாமையுமென்றே தோன்றுகின்றது.

ஐயோ! அப்பெண்ணுக்கு நன்மை தருமென்று நினைக்கும் இது பின்னர் தீமையாக முடிகின்றதே. இவள் தன் மாமி வீட்டில் செய்யும் ஒவ்வொரு வேலையிலும் குற்றஞ் சொல்லிக் குரூர தண்டனை செய்யப்படுவாளே. அங்ஙனம் செய்யப் பெற்று வருத்தப்படுகையில் பெற்றோர்களும் மற்றோர்களும் அம்மாமி நாத்திகள் மேல் பழிகூறத் தலைப்படுகின்றார்கள். யாரும் மூன்று பிழைகள் பொறுப்பது இயற்கை. அளவற்ற பிழைகள் செய்தால் யாவர் பொறுப்பார்! "சிறியோர் பெரும் பிழை செய்தனராயிற் பெரியோ ரப்பிழை பொறுப்பது மரிதே" எனச் சொல்லப்பட்டிருக்கின்றதே. இது யார் மேற் குற்றமாக நினைக்கத் தக்கது! "வருந்த வளைவே யரசர் மாமுடியின் மேலாம், வருந்த வளையாத மூங்கில், தரித்திரமாய், வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல்லாம் திரிந்து தாழுமவர் தம் மடிக்கீழ் தான்" என்பதில் இளை

மையில் வளைக்கப்பட்ட மூங்கில், அதாவது, பல்லக்கு மேற் கொம்புக்கென்று வளைக்கப்பட்ட மூங்கிற் கொம்பானது பின் இராஜர்களது முடிமேல் நின்று உயர்ந்து விளங்கும். அங்ஙனம் இளமையில் வருத்தி வளைக்கப்படாத மூங்கில், கழைக் கூத்தாடிகள் காலில் அகப்பட்டு வருந்துகின்றது. அதுபோல பெண்கள் தம் தாய் வீட்டில் வருத்தப் படுத்தப்பட்டு வேலைகளைக் கற்றுக் கொள்ளாதபோது பின்னர் மாமி நாத்திகளால் வருத்த வருந்துவது தவிருமா! வேலை தெரியாதவனுக்குக் கூலி கிடைக்குமா! கணவனுக்கு இனிய உணவுகள் செய்து பரிமாறத் தெரியாதவள் மேல் அவனுக்குப் பிரியம் உண்டாகுமா! உபசரிக்க வகை அறியாதவள் உபசரிக்கப்படுவாளா! இன்பம் அனுபவிக்கப் பாத்திரமாவாளா! புத்தியிருக்குமானால் எல்லாம் கற்றுக் கொள்வாள் என்பார்கள். அது வாஸ்தவமே. கைப் பழக்கமின்றி அவ்வறிவு பயன்படுமா! சகல கலா பண்டிதன் ஒருவன், புதிதாக உளி முதலியவைகளைப் பிடித்துத் தச்சு வேலை செய்யத் தொடங்குவானாயின் கை கால்களிற் காயம்பட்டு வருந்துவானேயன்றித் தாராளமாய்ச் செய்து முடிப்பானோ! அவனே சித்திர மெழுத ஆரம்பிக்கின் அச்சித்திரம் எப்படி முடியும்! தாறுமாறாக வல்லவோ முடியும். "சித்திரமும் கைப் பழக்கம்" என்றிருக்கின்றதே. சமையலுக்குக் கை பாகம் செய் பாகம் இருக்க வேண்டுமென்பார்களே. அது என்ன! ஆகையால் உலகத்தில் எந்த வேலைகளுக்கும் அறிவும் கைப் பழக்கமும் வேண்டுவது ஆவசியகம். வீணை வாசித்தல் தையல் முதலிய தொழில்கள் எவ்வாறு நடக்கின்றன வென்பதை யோசிக்க வேண்டும். சமையல் வேலையும் அவற்றுள் ஒன்று தான் இது கற்பிக்கப்படாத பெண், கணவனுக்கு ஒரு புண் ஆம். மனிதர்களுக்கு உணவே பிரதானம். அவ்வுணவும் ருசிகரமாயிருந்தால் தான் மனதிற்கு மிகுந்த ஆநந்தம். இதனால் இக போகங்கள் மீது விருப்பமும் தேகதாருட்டியமும் நடந்து வரும். சமையல் செய்வதிலும் பலார்த்த வர்க்கங்கள் செய்வதிலும், தையல் பின்னல் ஆதியவற்றிற் தேர்ந்தவளும் தன் புருஷநாயகருக்கு இன்பம் பொருந்தியிருப்பாள். ஆகையால் தாய்மார்கள், தம் பெண்களுக்கு வீட்டுக் குடித்தன வகைகளையும் மரியாதைகளையும் தினந்தோறும் கற்பித்து வரக் கோருகிறேம். அடுக்களையிற் (அடுப்பு) போனால் மகளுக்கு உடல் கறுத்துப் போகுமென்றும், பிறர்க்கு மரியாதை செய்தால் தாழ்ந்து போவாளென்றும் நினைத்து சுத்த அவிவேகியாக்கக் கூடாது. இத்தகைய அவிவேகப் பெண்களைப் பிரத்தியட்சமாகக் கண்டே நாம் மிகத் துக்கித்து இதை எழுத ஆரம்பித்தேம். பிழையுளதேல் மன்னிக்கக் கோருகின்றேம்.